[1981 மார்ச் 24

மாநகராட்சி மேல் நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு 2,400 ரூபாய் என்ற வரம்புக்குட்பட்டு 40 விழுக்காடு இணை மானியம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடத்திற்கும் மேல் நிலைப் பள்ளிகள் வாங்கத்தக்க நூலகப் புத்தகப் பட்டியல்களை வல்லுநர்களைக் கொண்டு வகுத்து பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அவற்றிலிருந்து பள்ளிகள் புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாங்கலாம். இதுதான் இப்போது இருக்கின்ற திட்டம்.

இன்டர்னல் அசெஸ்மென்டைப் பொறுத்தமட்டில், இந்த யோசனையை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தற்போதுள்ள விதிகளின் காரணமாக பெரியார், அண்ணா ஆகியவர்களுடைய நூல்களை அனைத்துப் பள்ளிகளுக்கும் வாங்க முடியாத நிலை உள்ளதால், அந்த விதிகளைத் தளர்த்தி அனைத்து பள்ளிகளுக்கும் அத்தகைய புத்தகங்களை வாங்க வசதி செய்து தரப்படுமா? நூல்களை வாங்கித் தருவது மட்டுமல்லாமல், பாடத் திட்டத்திலேயே பெரியார், அண்ணா ஆகியவர்களுடைய நூல்களை இணைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அனைத்துப் பள்ளிகளுக்கும் இப்போது புத்தகங்கள் வாங்கித் தருவதில்லை. ஒதுக்கப்படுகிற பணத்திலே சில சில பள்ளிகளுக்குத்தான் வாங்கித் தருகிறோம் என்பது இங்கே தந்திருக்கிற விவரத்திலேயிருந்து தெரிய வருகிறது. பெரியார், அண்ணா போன்றவர்களுடைய கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் இடம் பெற வேண்டும் என்பதில் அரசுக்கு அக்கறை இருக்கிறது. அதுபற்றி அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

பட்டதாரி ஆசிரியர்கள்.

***155 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள (i) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், (ii) பி.டி. பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

1981 மார்ச் 24]

(இ) இவர்களில் 15—6—1980 நாளன்றுள்ளபடி, (i) நியமனம் பெற்றவர்கள், (ii) நியமனம் பெறாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களை, நேரடித் தேர்வின் மூலம் நிரப்புவதற்கு 1978 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விண்ணப்பங்கள் ஏதும் கோரவில்லையாதலால் இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : 1976 ஆம் ஆண்டில் எத்தனை பேர் என்றுதான் எழுதியிருந்ததாக எனக்கு நினைவு. ஒருவேளை தவறாக 1978 ஆம் ஆண்டு என்று எழுதிவிட்டேனோ என்னவோ தெரியவில்லை. ஆகவே 1976 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப் பட்ட பட்டியலில் உள்ளவர்கள் பற்றிய தகவல் மாண்புமிகு அமைச்சரிடத்திலே இருந்தால் தெரிவிக்கலாம். இதுதான் அந்தக் கேள்வியின் நோக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளியில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடங்களை தேர்வாணைக் குழுவின் மூலமாக நிரப்ப கடைசியாக 1975-76 ஆம் ஆண்டு நியமனத் தேர்வு நடத்தப்பட்டது. இதில் 342 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள்.

*156 வினா.—**திரு. த. சந்தோஷம் மற்றும் திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் விடுமுறைகளிலும் பணியாற்ற வேண்டிய பணியாளர்களாகக் கருதும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இப்பொருள் பற்றிய கருத்துரு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : பல்லாண்டுகளாகவே இந்தக் கோரிக்கை தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களிடம் இருந்து வருகிறது. இது குறித்து விரைவாக ஒரு ஆணை பிறப்பித்து அவர்களுக்கு இந்த நன்மையை வழங்க அரசு முன்வருமா?